தமிழ்நாடு அரசு

எண்ணும் எழுத்தும்

# தமிழ்

## பயிற்சி நூல்

## மலர்

### பருவம் – III

2025 - 2026

**பள்ளிக் கல்வித்துறை**

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 1 11/5/2025 4:13:31 PM

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – 2022

திருத்திய பதிப்பு – 2023, 2024, 2025

**பயிற்சி நூல் உருவாக்கமும் தொகுப்பும்**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2022

**நூல் அச்சாக்கம்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 2 11/5/2025 4:13:31 PM

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும்** அமைந்ததொரு **குடியரசாக நிறுவவும்,**

அதன் குடிமக்கள் அனைவரும்
சமுதாய, பொருளியல், அரசியல், **நீதி**;
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை**;
சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை**
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்
தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
**உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 3 11/5/2025 4:13:32 PM

## உள்ளடக்கம்


| வ. எண் | பாடத் தலைப்பு | பக்க எண் |
| --- | --- | --- |
| 1 | அடுத்தது எது? | 01 |
| 2 | இயற்கை அன்னை | 05 |
| 3 | ஆடலாம்! பாடலாம்! | 24 |
| 4 | நல்ல நண்பர் | 37 |
| 5 | மழைப் பாட்டு | 54 |
| 6 | நாங்கள் உருவாக்குவோம் | 72 |
| 7 | கண்டுபிடி! கண்டுபிடி! | 86 |
| 8 | நல்லவை அறிவோம் | 92 |
| | படித்தல் பயணம் | 100 |








EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 4 11/5/2025 4:13:35 PM

# 1 அடுத்தது எது?

## 1.1 கண்டுபிடிப்போம்; கண்டுபிடிப்போம்


**அடுத்தது எது? இணைப்போம்**








**பிம்பம் எது? ✓ குறியிடுவோம்**













EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 1 11/5/2025 4:13:36 PM


## 1.2 ஒன்றுபோல் உள்ள படங்களுக்கு ஒரே வண்ணம் தீட்டுவேன்





EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 2 11/5/2025 4:13:36 PM

## 1.3 ஒளிந்துள்ள விலங்குகளைக் கண்டுபிடிப்போம்; வண்ணம் தீட்டுவோம்




## 1.4 பிம்பத்திற்கு உரிய பூனையைக் கண்டுபிடிப்போம்; வட்டமிடுவோம்




## 1.5 கண்டுபிடிப்போம்; கண்டுபிடிப்போம்


### அடுத்தது எது? வட்டமிடுவோம்





### வடிவங்களைப் பொருத்துவோம்



### பிம்பத்தைக் கண்டுபிடிப்போம்; இணைப்போம்



### குளத்தில் இல்லாத மீன் எது? வட்டமிடுவோம்



பக்கம் – 100, 101, 102 படித்தல் பயணம் செல்வோம்.



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 4 11/5/2025 4:13:38 PM

# 2 இயற்கை அன்னை

VJ19Y

## 2.1 படம் பார்த்துப் பேசுவோம்













## 2.2 பெயரைச் சொல்வோம்; எழுத்தை அறிவோம்

**கெ**



கெண்டி



கெண்டைமீன்

**செ**



செடி



செருப்பு

**டெ**



சுண்டெலி



கட்டெறும்பு

**தெ**



தெரு



தென்னை

**நெ**



நெல்



நெல்லிக்காய்

**மெ**




மெத்தை




மெழுகுவத்தி

**வெ**



வெட்டுக்கிளி



வெங்காயம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஙெ | ஞெ | ணெ | பெ | யெ | ரெ |
| லெ | ழெ | ளெ | றெ | னெ | |

## 2.3 கெ முதல் னெ வரை எழுத்துகளை இணைப்பேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ணெ | தெ | நி | ழெ | ளெ | றெ |
| டெ | நெ | பெ | வெ | ள | னெ |
| ஞெ | செ | மெ | லெ | ளெ | |
| கெ | ஙெ | யெ | ரெ | றெ | |





## 2.4 நாங்களே படிப்போம்; விடையளிப்போம்

மதி | ஒலி | பறித்தாள் | கிழித்தாள் | சுருட்டினாள் | பார்த்தாள் | மகிழ்ந்தாள்



மதிக்கு ஒலியெழுப்ப ஆசை.

இலையைப் பறித்தாள்.

இரண்டாய்க் கிழித்தாள்.

கிழித்ததைச் சுருட்டினாள்.

நுனியை அழுத்திச் சேர்த்தாள்.

ஊதிப் பார்த்தாள்.

ஒலியெழுப்பி மகிழ்ந்தாள்.

**மதி செய்த பொருள் எது?**

பட்டம் ☐ ஊதல் ☐ ஊஞ்சல் ☐

## 2.5 நாங்களே படிப்போம்; விடையளிப்போம்

கிளிக்குஞ்சு வந்தது.
அக்கம்பக்கம் பார்த்தது.
பறந்து மரத்தில் அமர்ந்தது.

அணில்பிள்ளை வந்தது.
சுற்றும்முற்றும் பார்த்தது.
மரத்தில் ஏறிக்கொண்டது.



யானைக்கன்று வந்தது.
மேலே கீழே பார்த்தது.
மரத்தினடியில் நின்றது.

நண்பர்கள் கூடினர்.
பேசிப்பேசி மகிழ்ந்தனர்.

________________ வந்தது.
அங்குமிங்கும் பார்த்தது.
தாவிக் கிளையில் அமர்ந்தது.

**பறந்துசென்று மரத்தில் அமர்ந்தது எது?**

கிளிக்குஞ்சு ◯ குருவிக்குஞ்சு ◯ அணில்பிள்ளை ◯

**சரியான தொடருக்கு ✓ குறியிடுக.**

கிளிக்குஞ்சும் யானைக்கன்றும் பகைவர்கள். ◯

கிளிக்குஞ்சும் யானைக்கன்றும் நண்பர்கள். ◯

கிளிக்குஞ்சும் யானைக்கன்றும் உறவினர்கள். ◯



## 2.6 இது எங்கள் நேரம்



### படிப்போம்; பாடநூலில் அடிக்கோடு இடுவோம்

செந்தமிழ் | தேன் | பாயுது | தந்தையர் | காவிரி

தென்பெண்ணை | பாலாறு | வையை | பொருநைநதி | ஆறு

வான்புகழ் | ஆரம் | சக்தி பிறக்குது. | செழித்த தமிழ்நாடு.

### மேலுள்ளவற்றில் இருந்து விடையைக் கண்டுபிடித்து எழுதுவோம்

1. ழ் என்ற எழுத்தில் முடியும் சொற்கள்

---------------------------------------- ----------------------------------------

2. மூன்று எழுத்துச் சொற்கள் ------------------------------------

---------------------------- ---------------------------- ----------------------------

3. இரண்டு எழுத்துச் சொற்கள் ------------------------------------

---------------------------------------- ----------------------------------------

4. ண் எழுத்து உள்ள சொல் ----------------------------------------

5. செழிப்பைக் குறிக்கும் தொடர் எது?

--------------------------------------------------------------------------------



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 9 11/5/2025 4:13:47 PM

## சிறகுகள் விரியட்டும் 2

## 2.7 எழுத்து எது? கண்டுபிடித்து எழுதுவேன்

கெ செ பெ



பெ

மெ ரெ வெ



நெ தெ னெ



நெ னெ ழெ





டெ வெ றெ



மெ ரெ செ



























## 2.8 என்னைப் பற்றி எழுதுவேன்

புகைப்படம்

பெயர் : ______________________________

வகுப்பு : ______________________________

பள்ளி : ______________________________

### என் குடும்பம்

தாய் பெயர் : ______________________________

தந்தை பெயர் : ______________________________

பெற்றோர் அலைபேசி எண் : ____________________

### நண்பர்கள் பெயர்

1. ________________________________________
2. ________________________________________
3. ________________________________________

### இருப்பிடம்

ஊர்ப் பெயர் : ______________________________

மாவட்டத்தின் பெயர் : ______________________________

மாநிலத்தின் பெயர் : ______________________________

நாட்டின் பெயர் : ______________________________



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 11 11/5/2025 4:13:53 PM

## 2.9 படிப்பேன்; விடையளிப்பேன்

**சேர்த்து எழுதுக.**

வான் + புகழ் = வான்புகழ்  தமிழ் + நாடு = ____________

**பிரித்து எழுதுக.**

நாடெனும் = நாடு + எனும்  நாடென்ற = ____________

காவிரியாறு = காவிரி + ஆறு  மணியாரம் = ____________



படித்தல் படிக்கட்டு

### செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடு என்னும் பெயரைக் கேட்கும்போது காதில் இனிமை வந்து சேர்கிறது. இது எங்கள் தந்தையர் நாடு என்று பேசும்போது மூச்சில் சக்தி பிறக்கிறது.

காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகள் பாய்வதால் வளமை அடைந்த நிலப்பரப்பைக் கொண்டது தமிழ்நாடு.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை உலக மக்களுக்குத் தந்து வானளாவிய புகழ்கொண்டது தமிழ்நாடு. மனத்தைக் கவரும் சிலப்பதிகாரம் என்னும் மணி ஆரத்தைத் தந்தது தமிழ்நாடு.

**ஒரு நிமிடத்தில் படித்த சொற்களின் எண்ணிக்கை** ____________

**முழுப்பகுதியையும் படிக்க எடுத்துக்கொண்ட நேரம்** ____________



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 12 11/5/2025 4:13:53 PM

## 2.10 படித்துப் பார்ப்போம்

### செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடு என்றால் காதில் தேன் பாய்கிறது.

தந்தையர் நாடு என்றால் மூச்சில் சக்தி பிறக்கிறது.

காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, பொருநைநதி

ஆகிய ஆறுகள் ஓடி தமிழ்நாடு செழித்திருக்கிறது.

வள்ளுவரையும் மணியாரமாகச் சிலப்பதிகாரத்தையும்

தமிழ்நாடு தந்தது.



**நிரப்புக.**

1. ________________ என்றால் காதில் தேன் பாய்கிறது.
2. தந்தையர் நாடு என்றால் மூச்சில் ________________ பிறக்கிறது.

**விடை எழுதுக.**

1. மணியாரம் என்று குறிப்பிடப்படுவது எது?

________________________________________

2. எந்தெந்த ஆறுகள் ஓடி தமிழ்நாடு செழித்திருக்கிறது?

________________________________________



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 13 11/5/2025 4:13:54 PM

## 2.11 நாங்களே உருவாக்குவோம்



அம்மா : என்ன வாங்கலாம்?

குழந்தைகள் : ____________________



வாத்துக்குஞ்சு 1 : புதிய குளத்திற்கு அம்மா அழைத்து வந்துள்ளார்.

வாத்துக்குஞ்சு 2 : இந்தக் குளம் ____________________



குயில் : காகமே, நீ பகிர்ந்து உண்பது எனக்கு மிகவும் பிடிக்கும்.

காகம் : குயிலே, ____________________.

படத்தைப் பார்த்து வினாக்கள் உருவாக்கிக் கேட்பேன்; குறிப்பேட்டில் எழுதுவேன்.



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 14 11/5/2025 4:13:55 PM



கிளி : நீயும் நானும் ஒரே நிறம்.

பச்சோந்தி : ஆனால், ______________________________



சிறுமி : அண்ணா எனக்குக் கால்பந்து விளையாடத் தெரியாதே!

சிறுவன் : வா ______________________________



சிறுவன் : நமது பாட்டி, தாத்தாவுக்குப் பரிசளிக்கலாம்.

சிறுமி : அவர்கள் ______________________________

(எ.கா.) குளத்தில் உள்ள பூக்களின் நிறம் என்ன?



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 15 11/5/2025 4:13:55 PM

## 2.12 எழுத்துகளை இணைத்துச் சொல்லைப் படிப்போம்


கெண்டி


செங்கல்


கட்டெறும்பு


எண்ணெய்


தெரு


நெல்


பெட்டி


மெழுகுவத்தி


வெல்லம்


**மேலுள்ள சொற்களைக் கொண்டு நிரப்புக.**

| | |
|---|---|
| ________ இனிக்கும். | ________ வெளிச்சம் தரும். |
| ________ ஊர்ந்து செல்லும். | ________ துணி அடுக்க உதவும். |
| ________ வீடு கட்ட உதவும். | ________ வயலில் உள்ளது. |

## 2.13 நாங்களே படிப்போம்; எழுதுவோம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கெ | ஙெ | செ | ஞெ | டெ | ணெ | தெ | நெ | பெ |
| மெ | யெ | ரெ | லெ | வெ | ழெ | ளெ | றெ | னெ |

| | | | |
|---|---|---|---|
| நெய் | தென்றல் | செங்குளவி | சுண்டெலி |
| மெழுகு | பெருவிரல் | பதினெட்டு | வெட்டுக்கிளி |
| கெளுத்தி | வெள்ளெலி | வெண்ணெய் | நெல்லிக்காய் |



வெட்டுக்கிளி தீப்பெட்டி தந்தது.
சுண்டெலி மூடிகள் தந்தது.
தீப்பெட்டி வண்டி செய்தன.
வண்டி ஓட்டி மகிழ்ந்தன.





EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 16 11/5/2025 4:13:58 PM

## 2.14 சொல் உருவாக்கித் தொடரை நிரப்புவோம்

| | |
|---|---|
| நீல மலர் | ___நீர்___ குடிக்கலாம். |
| பனியில் நிலா | ________ தின்னலாம். |
| செய்திப் பெட்டி | ________ நடலாம். |
| மாடியில் காளான் | ________ பார்க்கலாம். |
| மாங்காய் சாப்பிடு | ________ வளர்க்கலாம். |
| மீண்டும் பாடினான் | ________ பிடிக்கலாம். |

## 2.15 சிந்திப்போம்; விடையளிப்போம்

படத்திற்குப் பொருந்தாத தொடருக்கு ✓ குறியிடுக.



- மரத்தின்மீது காகம் அமர்ந்துள்ளது. ☐
- பாப்பாவை நோக்கிக் கன்றுக்குட்டி ஓடிவருகிறது. ☐
- ஆடும் கன்றுக்குட்டியும் அருகருகே உள்ளன. ☐

## சொல்லக்கேட்டு எழுதுவோம்



# வீட்டிலும் செய்யலாம்

## விடைதேடவா! விளையாடவா!

### 1. ஒரே முதல் எழுத்தை நிரப்பிச் சொற்களை எழுதுக.

- டி
- ருப்பு
- ங்கல்
- ந்தமிழ்
- ங்குளவி

### 2. ஒரே முதல் எழுத்தை நிரப்பிச் சொற்களை எழுதுக.

- ல்லம்
- ங்காயம்
- ள்ளெலி
- ண்ணெய்
- ட்டுக்கிளி

### 3. ஒரே வண்ணக் கோடுகளுக்கு ஒரே எழுத்தை நிரப்புக.

____லையைப் பறி____தா____

____ரண்டாய் கிழி____தா____

கிழி____ததைச் சுருட்டினா____

## 4. ஒரே வண்ணக் கோடுகளுக்கு ஒரே எழுத்தை நிரப்புக.

அணி___பிள்ளை வந்த___

சு___றும்மு___றும் பார்த்த___

மரத்தி___ ஏறிக்கொண்ட___

## படிப்பேன்; தொடர் உணர்த்தும் கருத்துக்கு ✓ செய்வேன்

1. வெற்றி பெற்றதற்காக வாழ்த்துகள் கூறினார்.

அ) போட்டி நடந்து முடிந்துவிட்டது. ☐

ஆ) இனிமேல்தான் போட்டி நடக்கும். ☐

2. தேன் குடித்துவிட்டுத் தோட்டத்திலிருந்து தேனீக்கள் பறந்தன.

அ) தோட்டத்தில் பூக்கள் இல்லை. ☐

ஆ) தோட்டத்தில் பூக்கள் இருந்தன. ☐

3. வருண் தன்னிடமிருந்த பந்துகளில் ஒன்றைத் தோழிக்குக் கொடுத்துவிட்டான்.

அ) வருணிடம் தற்போது பந்து இல்லை. ☐

ஆ) வருணிடம் தற்போது பந்து உண்டு. ☐

4. புளிப்புமிட்டாயின் சுவை பிடிக்காததால் கயல் தின்பதில்லை.

அ) கயல் புளிப்புமிட்டாயைத் தின்றுள்ளாள். ☐

ஆ) கயல் புளிப்புமிட்டாயைத் தின்றதில்லை. ☐



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 19 11/5/2025 4:14:00 PM




**சிட்டு, நீ சரியான நேரத்தைப் பின்பற்றிச் செய்யும் செயல்கள் எவை?**

நான் சரியான நேரத்தில்,

- இரைதேடச் செல்வேன்.
- கூட்டிற்குத் திரும்புவேன்.
- தூங்கச் செல்வேன்.



**நீங்கள் எப்போதெல்லாம் சரியான நேரத்தைப் பின்பற்றுவீர்கள்?**



**நான் சரியான நேரத்தில்,**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

## வளரறி மதிப்பீடு (ஆ)

**மொத்த மதிப்பெண்கள் = 10**

### 1 படங்களுக்கு உரிய முதல் எழுத்து எது? எடுத்து எழுதுக. (2 x 1 = 2)

  ☐

செ / வெ

  ☐

நெ / நே

### 2 படத்திற்கு உரிய சொல்லை ✓ செய்க. (2 x 1 = 2)



தெரு ☐

செடி ☐



சுண்டெலி ☐

செங்குளவி ☐

### 3 படத்தின் பெயரை எழுதுக. (2 x 1 = 2)

 ____________

 ____________

### 4 படத்தில் உள்ளவற்றின் பெயர்களை எழுதுக. (2 x 1 = 2)



____________________

____________________

### 5 படத்திற்கு உரிய தொடரை ✓ செய்க. (1 x 2 = 2)



அழகான நாய்க்குட்டி. ☐

அழகான காகம். ☐

## வளரறி மதிப்பீடு (ஆ)

மொத்த மதிப்பெண்கள் = 10

2 x 1 = 2

**1** படத்திற்கு உரிய சொல்லை வட்டமிடுக.



செருப்பு

செம்பருத்தி

செங்கல்

மெழுகு

தென்னை

நெல்



2 x 1 = 2

**2** சொல்லில் இருந்து சொற்களை உருவாக்கி எழுதுக.

கடிகாரம்

______________________

______________________

2 x 1 = 2

**3** உயர்திணை, அஃறிணைப் பெயர்களை எடுத்து எழுதுக.

பம்பரம் குமுதா வெள்ளரி அக்பர்

உயர்திணை : ______________________

அஃறிணை : ______________________

1 x 2 = 2

**4** படத்திற்கு உரிய தொடர் எது? ✓ செய்க.



மரத்தில் பழங்கள். ☐

கூடையில் பழங்கள். ☐

2 x 1 = 2

**5** படம் பார்த்துத் தொடர்கள் எழுதுக.



______________________

______________________

## வளரறி மதிப்பீடு (ஆ)

மொத்த மதிப்பெண்கள் = 10

**1** ஒரே எழுத்தை நிரப்பிச் சொற்களை உருவாக்குக. 2 x 1 = 2

டெ நெ கெ

________ய் - ____________

________ருப்பு - ____________

**2** தலைப்பிற்குப் பொருந்தும் சொல் ✓ பொருந்தாத சொல் × குறியிடுக. 2 x 1 = 2

| உயர்திணை | | அஃறிணை | |
|---|---|---|---|
| காகம் | ☐ | மயில் | ☐ |
| மாமா | ☐ | மதன் | ☐ |

**3** பாடல் வரிகளைப் படித்து விடை எழுதுக. 2 x 1 = 2

காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி

இதில் இடம்பெற்றுள்ள இரண்டு ஆறுகளின் பெயர்களை எழுதுக.

____________ ____________


**4** படத்துடன் தொடர்புடைய தொடரை ✓ செய்க. 1 x 2 = 2



சிறுமி பந்து விளையாடுகிறாள். ☐

சிறுவன் ஊஞ்சல் ஆடுகிறான். ☐

**5** படம் பார்த்துத் தொடர்கள் எழுதுக. 2 x 1 = 2



________________________

________________________

பக்கம் – 103, 104, 105 படித்தல் பயணம் செல்வோம்.




EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 23 11/5/2025 4:14:05 PM

# 3 ஆடலாம்! பாடலாம்!

சிறகுகள் விரியட்டும் 1

## 3.1 கே முதல் னே வரை எழுத்துகளை இணைப்பேன்




| | | | | |
|---|---|---|---|---|
| கே | ஙே | சி | டே | |
| கீ | சே | ஞே | ணே | |
| யு | மே | நே | தே | ரே |
| ரே | யே | பே | நீ | |
| லே | வே | ழ் | றே | |
| வெ | ழே | ளே | னே | |



## 3.2 நாங்களே படிப்போம்; விடையளிப்போம்

சாறு | உப்பு | தண்ணீர் | எடுத்தான் | பிழிந்தான் | கலந்தான் | ஊற்றினான்

ஆல்வினுக்குத் தாகம் எடுத்தது.
எலுமிச்சையை எடுத்தான்.
சாறு பிழிந்தான்.
தண்ணீர் ஊற்றினான்.
சர்க்கரை கலந்தான்.
உப்பு போட்டான்.
குவளையில் ஊற்றினான்.
சுவைத்துக் குடித்தான்.



ஆல்வின் சுவைத்துக் குடித்தது எது?


- பழச்சாறு ☐
- தண்ணீர் ☐
- தேநீர் ☐



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 24 11/5/2025 4:14:06 PM

## 3.3 நாங்களே படிப்போம்; விடையளிப்போம்







கடலில் நானும் இருந்தேன்.

ஆவியாகிச் சென்றேன்.

மேகமாகத் திரண்டேன்.

மழையாகப் பொழிந்தேன்.

அருவியாகக் கொட்டினேன்.

பாய்ந்து நானும் ஓடினேன்.

ஓடையாகப் பிரிந்தேன்.

ஆறாகச் சேர்ந்தேன்.

வளைந்து வளைந்து சென்றேன்.

கடலில் நானும் கலந்தேன்.

**தண்ணீர் இறுதியாக எதில் கலந்தது?**

◯ கிணறு ◯ குளம் ◯ கடல்

**இத்தொடர்கள் அனைத்தும் எதைப்பற்றியது?**

◯ அருவி ◯ ஆறு ◯ தண்ணீர்



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 25 11/5/2025 4:14:07 PM

## 3.4 இது எங்கள் நேரம்



### படிப்போம்; பாடநூலில் அடிக்கோடு இடுவோம்

புலி அரசர் பதவி ஏற்றார் அளித்தார்

படைத்தளபதி நன்றி இரவுக்காவல் அமைச்சர் ஆமை

முயல் அடையாளம் குரல் அறிவுக்கூர்மை தூதுவர்

ஏற்றுக் கொள்ளுங்கள். மெதுவாகச் செல்லும். மிரண்டு ஓடும்.

### மேலுள்ளவற்றில் இருந்து விடையைக் கண்டுபிடித்து எழுதுவோம்

1 முதல் எழுத்தை மாற்றினால் கிடைக்கும் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உரல் | குரல் | எலி | | கற்றார் | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வயல் | | உதவி | | பன்றி | | சாமை | |

2 காவல் உள்ள சொல் ______________________

3 அடை உள்ள சொல் ______________________

4 கூர் உள்ள சொல் ______________________

5 படை உள்ள சொல் ______________________

6 ஓடும் தொடர் ______________________


7 செல்லும் தொடர் ______________________

## 3.5 எழுத்து எது? கண்டுபிடித்து எழுதுவேன்

வே சே றே



மே னே சே



யே மே கே



கே பே வே




லே தே நே





பே ழே நே













EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 27
11/5/2025 4:14:10 PM

## 3.6 படிப்பேன்; விடையளிப்பேன்

**பிடித்தவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| பாடல் பாடுவேன். | நடனம் ஆடுவேன். | நாடகம் நடிப்பேன். |
| வண்ணம் தீட்டுவேன். | ஓவியம் வரைவேன். | நன்றாகப் பேசுவேன். |
| புதிர் உருவாக்குவேன். | உடற்பயிற்சி செய்வேன். | செடிகள் வளர்ப்பேன். |
| நட்புடன் பழகுவேன். | கணினியைப் பயன்படுத்துவேன். | நீச்சல் அடிப்பேன். |



### படித்தல் படிக்கட்டு

புலி அரசர் பதவி ஏற்றார். பிற விலங்குகளுக்குப் பொறுப்புகளை அளித்தார். யானையாருக்குப் படைத்தளபதி பொறுப்பு அளிக்கப்பட்டது. ஆந்தையார் இரவுக்காவல் அமைச்சர் ஆனார். கழுதை, ஆமை, முயல் மூவரும் பயனற்றவர்கள் என்றது கரடி. ஒவ்வொருவரிடமும் திறமை உண்டு. அவர்களிடம் உள்ள திறமைகளை அடையாளம் கண்டார் புலி அரசர். கழுதை உரக்கக் குரல் எழுப்பும். அதை ஒற்றர்படைத் தலைவர் ஆக்கினார். ஆமை நீண்ட அனுபவத்தைக் கொண்டது. அதை அரசுக்கு வழிகாட்டும் அமைச்சர் ஆக்கினார். முயல் அறிவுக்கூர்மை கொண்டது. வேகமாக ஓடும். அதைத் தூதுவர் ஆக்கினார்.

**ஒரு நிமிடத்தில் படித்த சொற்களின் எண்ணிக்கை**

**முழுப்பகுதியையும் படிக்க எடுத்துக்கொண்ட நேரம்**



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 28 11/5/2025 4:14:10 PM

## 3.7 படித்துப் பார்ப்போம்

### தனித்திறமை

புலி அரசர் பதவி ஏற்றார்.

பொறுப்புகளைப் பகிர்ந்து அளித்தார்.

யானையார் படைத்தளபதி ஆனார்.

ஆந்தையார் இரவுக்காவல் அமைச்சர் ஆனார்.

கழுதை, ஆமை, முயல் மூவரும்

பயனற்றவர்கள் என்றது கரடி.

ஒவ்வொருவருக்கும் திறமை உண்டு.

அவரவர் திறமைக்கேற்பப் பொறுப்பை

அளித்தார் புலி அரசர்.

புரிந்து கொண்டது கரடி.



**நிரப்புக.**

1. காட்டின் அரசர் ________________.
2. ஆந்தையாருக்கு ________________ பொறுப்பு கொடுக்கப்பட்டது.

**விடை எழுதுக.**

1. கழுதை, ஆமை, முயல் மூவரையும் பயனற்றவர்கள் என்று கூறியது யார்?

________________________________

2. கழுதை, ஆமை, முயல் மூவருக்கும் எதன் அடிப்படையில் பொறுப்பு கிடைத்தது?

________________________________

3. உன்னுடைய தனித்திறனாக நீ நினைப்பது எது?

________________________________



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 29 11/5/2025 4:14:11 PM

## 3.8 நாங்களே உருவாக்குவோம்



**சிறுமி** : இந்த மிட்டாய் மிகவும் சுவையாக உள்ளது.

**சிறுவன்** : ____________________________________________.



**அம்மா** : பேருந்து பயணம் எப்படி இருந்தது?

**சிறுமி** : ____________________________________________.



**சிறுவன்** : அத்தை வீட்டிற்குச் செல்ல அதிக நேரம் ஆகுமா அப்பா?

**அப்பா** : ____________________________________________.

படத்தைப் பார்த்து வினாக்கள் உருவாக்கிக் கேட்பேன்; குறிப்பேட்டில் எழுதுவேன்.



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 30 11/5/2025 4:14:12 PM



சிறுமி : நிறைய கோவைப்பழங்கள் உள்ளன.

சிறுவன் : ________________________________.



சிறுமி : பூக்களை நெருக்கமாகக் கட்டியுள்ளார்கள்.

சிறுவன் : ________________________________.



சிறுவன் : அதோ ஊஞ்சல்! நான் ஆடப் போகிறேன்.


சிறுமி : ________________________________.



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 31 11/5/2025 4:14:12 PM

சிறகுகள் விரியட்டும் 3

## 3.9 எழுத்துகளை இணைத்துச் சொல்லைப் படிப்போம்



கேழ்வரகு



சேவல்




தேங்காய்



பேருந்து



மேகம்



வேர்


**மேலுள்ள சொற்களைக் கொண்டு நிரப்புக.**


| | | | |
|---|---|---|---|
| கூவிய | | மண்ணுக்குள் | |
| வயலில் | | வானில் | |
| பயணம் செய்ய | | மரத்தில் பறித்த | |

## 3.10 நாங்களே படிப்போம்; எழுதுவோம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கே | ஙே | சே | ஞே | டே | ணே | தே | நே | பே |
| மே | யே | ரே | லே | வே | ழே | ளே | றே | னே |

| | | | | |
|---|---|---|---|---|
| மேலே | நேற்று | தேக்குமரம் | மேம்பாலம் | உண்டேன் |
| உள்ளே | கேடயம் | தேன்சிட்டு | வேப்பமரம் | நடக்கிறேன் |
| வெளியே | சேமிப்பு | ஓடினேன் | பாடினேன் | பேரீச்சம்பழம் |






**சேற்று வயலுக்குச் சென்றேன்.**

**செடியில் தேன்சிட்டு கண்டேன்.**

**வானில் மேகம் பார்த்தேன்.**

**பாட்டு கேட்டு மகிழ்ந்தேன்.**





## 3.11 படக்கதையைப் படிப்போம்






EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 33 11/5/2025 4:14:18 PM

## 3.12 தொடர்புடைய சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுவேன்






| வானவில் | வாத்து | ஆலமரம் | ஆறு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| தண்ணீர் | மீன் | மணல் | |
| ஏழு | வண்ணம் | வானம் | |
| நிழல் | விழுதுகள் | ஊஞ்சல் | |
| குளம் | நீந்துதல் | குவாக் | |
| கதவு | பாதுகாப்பு | | பூட்டு |
| இரவு | | | நிலா |

## 3.13 சிந்திப்போம்; விடையளிப்போம்

மூன்று குறிப்புகளுக்கும் ஏற்ற படத்தை ✓ செய்க.

- குழந்தை பசியோடு இருந்தது.
- அப்பா கிண்ணத்தில் பால்சோறு எடுத்து வந்தார்.
- நிலாவைக் காட்டி ஊட்டினார்.

 ☐  ☐  ☐

## சொல்லக்கேட்டு எழுதுவோம்



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 34 11/5/2025 4:14:20 PM



# வீட்டிலும் செய்யலாம்

## விடைதேடவா! விளையாடவா!

### 1. இறுதி எழுத்தை நிரப்புக.

தண்ணீ, தேநீ, புதி, மோா, அரச, அமைச்ச → ( )

வானவி, ஊஞ்ச, சேவ, கட, மண, நிழ → ( )

### 2. ஒரே எழுத்தை நிரப்புக.

| | | | |
|---|---|---|---|
| வானில் இருப்பது | மே | க | |
| குதித்து ஓடுவது | மு | ய | |
| தண்ணீர் இருப்பது | கு | ள | |

| | | | | |
|---|---|---|---|---|
| தாளில் வரைவது | ஓ | வி | ய | |
| பூக்களில் இருப்பது | வ | ண் | ண | |
| மரத்தில் ஆடுவது | ஊ | ஞ் | ச | |

### 3. ஒரே வண்ணக் கோடுகளுக்கு ஒரே எழுத்தை நிரப்புக.

செடியி____ தேன்சிட்____ கண்டே____.

வானி____ மேகம் பார்த்தே____.

பாட்____ கேட்____ மகிழ்ந்தே____.

## எழுத்துகளை நிரப்புவேன்; சொற்களை உருவாக்குவேன்

| | உ | இ | ஓ | ஐ | |
|---|---|---|---|---|---|
| க் | கு | கி | கோ | கை | கோதுமை, தோகை, மை, குகை, விதை, கை, தை, வை, முத்து, குத்து, மிதி, விதி, குதி |
| த் | து | தி | தோ | தை | |
| ம் | மு | மி | மோ | மை | |
| வ் | வு | வி | வோ | வை | |

| | அ | ஐ | உ | உ | |
|---|---|---|---|---|---|
| ப் | | | | | |
| ல் | | | | | |
| க் | | | | | |
| ட் | | | | | |




**சிட்டு, நீ எப்போதெல்லாம் ஒற்றுமையாகச் செயல்படுவாய்?**

- இரைதேட பிறருடன் செல்லும்போது
- நண்பர்களுடன் விளையாடும்போது
- கூட்டில் உள்ளவர்களுடன் இருக்கும்போது



## நீங்கள் எப்போதெல்லாம் ஒற்றுமையாகச் செயல்படுவீர்கள்?




# 4 நல்ல நண்பர்

## 4.1 பெயரைச் சொல்வோம்; எழுத்தை அறிவோம்

**டை**




வடை




கூடை

**தை**




நத்தை




ஆந்தை

**லை**




மலை




இலை

**மை**



ஆமை




எருமை

**ரை**



அவரை



குதிரை

**வை**



போர்வை




ஔவை

**ழை**




கற்றாழை



வாழை

**னை**



யானை



பானை

| | | | | |
|---|---|---|---|---|
| கை | ஙை | சை | ஞை | ணை |
| நை | பை | யை | ளை | றை |

A5QOC



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 37 11/5/2025 4:14:25 PM

சிறகுகள் விரியட்டும் 1

## 4.2 கை முதல் னை வரை எழுத்துகளை இணைப்பேன்




## 4.3 நாங்களே படிப்போம்; விடையளிப்போம்

ஆசை | நூல் | பசை | எடுத்தான் | ஒட்டினான்

பறக்கவிட்டான் | வண்ணத்தாள்கள் | தென்னங்குச்சிகள்

கவினுக்கு விளையாட ஆசை.
வண்ணத்தாள்கள் வாங்கினான்.
தென்னங்குச்சிகளை எடுத்தான்.
பசை, நூல், கத்தரிக்கோல் எடுத்தான்.
வண்ணத்தாளை வெட்டினான்.
தென்னங்குச்சிகளை ஒட்டினான்.
வாலை ஒட்டினான். நூலைக் கட்டினான்.
பறக்கவிட்டான்.



**கவின் எதைச் செய்தான்?**

தோரணம் ☐ காற்றாடி ☐ பட்டம் ☐

## 4.4 நாங்களே படிப்போம்; விடையளிப்போம்



அத்தை வீட்டுக்குச் செல்லுவேன்.

மெத்தையிலே தூங்குவேன்.



பெரியப்பா வீட்டுக்குச் செல்லுவேன்.

சரிகைச் சட்டைப் போடுவேன்.



சித்தி வீட்டுக்குச் செல்லுவேன்.

அத்திப்பழம் தின்னுவேன்.



பாட்டி வீட்டுக்குச் செல்லுவேன்.

குட்டிப்பூனை பார்ப்பேன்.



அண்ணன் வீட்டுக்குச் செல்லுவேன்.

திண்ணையிலே ஆடுவேன்.



____________ வீட்டுக்குச் செல்லுவேன்.

சீத்தாப்பழம் பறிப்பேன்.

**சித்தி என்னும் சொல்லுக்குத் தொடரில் உள்ள ஒத்த ஓசைச் சொல் எது?**

அத்தி ◯ சுத்தி ◯ மெத்தை ◯

**விரும்பியதை எழுதுக.**

பாட்டி வீட்டுக்குச் செல்லுவேன்

............................................................



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 39 11/5/2025 4:14:29 PM

## 4.5 இது எங்கள் நேரம்



### படிப்போம்; பாடநூலில் அடிக்கோடு இடுவோம்

நெடுநாள் | நண்பர்கள் | மான் | நரி | எண்ணியது

தேடியது | ஆபத்து | பின்தொடர்ந்தது | அதிகரித்தது | முயல்

செல்கிறாய் | திட்டம் | தொடங்கின | தப்பித்தன | மகிழ்ந்தன

இரையைத் தேடியது. | பலமுறை அழைத்தது. | எங்கே செல்கிறாய்?

### மேலுள்ளவற்றில் இருந்து விடையைக் கண்டுபிடித்து எழுதுவோம்

1 விலங்குகளின் பெயர்கள் ------------------------------

2 **ன** எழுத்தில் முடியும் சொற்கள் ------------------------------

------------------------------ ------------------------------

3 கீழ்க்காணும் சொல்லைக் கொண்ட சொல்லை எடுத்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எண் | எண்ணியது | தொடர் | | தேடி | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பத்து | | கரி | | நாள் | | செல் | |

4 முறை உள்ள தொடர் ------------------------------

5 இரை உள்ள தொடர் ------------------------------



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 40 11/5/2025 4:14:31 PM

சிறகுகள் விரியட்டும் 2

## 4.6 எழுத்து எது? கண்டுபிடித்து எழுதுவேன்

வை தை டை



கை சை தை




பை சை ஙை



ளை லை னை



நை தை கை



லை யை ரை




ளை தை றை



ழை மை ஞை






| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

## 4.7 படிப்பேன்; விடையளிப்பேன்

**பிரித்து எழுதுக.**

மகிழ்ச்சியுடன் = ____________________ (மகிழ்ச்சி + உடன் / மகிழ்வு + உடன்)

பார்ப்பதில்லை = பார்ப்பது + இல்லை    ஆபத்தில்லை = ______

**சரியான கூற்றுக்கு ✓ செய்க.**

| | |
|---|---|
| நரி மானை அழைத்துச் சென்றது. ◯ | முயலும் மானும் நண்பர்கள். ◯ |
| முயலும் மானும் தப்பிக்கவில்லை. ◯ | நரி மானைப் பிடித்துவிட்டது. ◯ |
| நரிக்குக் குழப்பம் ஏற்பட்டது. ◯ | நரி முயலைப் பிடித்துவிட்டது. ◯ |



படித்தல்
படிக்கட்டு

முயலும் மானும் நெடுநாள் நண்பர்கள். அவை அடர்ந்த காட்டில் வாழ்ந்து வந்தன. மான் பார்ப்பதற்குக் கொழுகொழுவென்று இருந்தது. மானை வேட்டையாட ஒரு நரி எண்ணியது.

ஒருநாள் நரி, பசியோடு இரையைத் தேடியது. அப்போது மான் தனியாக இருப்பதைப் பார்த்தது. நரி, மானின் அருகில் வந்தது. மான் பயந்து ஓடப் பார்த்தது. "நண்பா நில், உன் நண்பன் முயலுக்கு ஆபத்து. நீதான் முயலின் நெருங்கிய நண்பன் ஆயிற்றே, அதனால்தான் உன்னிடம் சொல்ல வந்தேன்" என்றது நரி. "அப்படியா! முயலுக்கு என்ன ஆனது? அது எங்கே இருக்கிறது?" என்று கேட்டது மான்.

**ஒரு நிமிடத்தில் படித்த சொற்களின் எண்ணிக்கை** ______

**முழுப்பகுதியையும் படிக்க எடுத்துக்கொண்ட நேரம்** ______



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 42    11/5/2025 4:14:32 PM

## 4.8 படித்துப் பார்ப்போம்

### நட்பே உயர்வு

முயலும் மானும் நண்பர்கள்.

மானிடம் நரி வந்தது.

முயலுக்கு ஆபத்து என்றது.

ஏமாற்றி அழைத்துச் சென்றது.

அதை முயல் பார்த்துவிட்டது.

வேகவேகமாக மானிடம் ஓடியது.

மான் முயலைப் பார்த்துவிட்டது.

நரியின் திட்டம் புரிந்துவிட்டது.

இரு வேறு திசைகளில் ஓடின.

நரிக்கு மானைப் பிடிப்பதா?

முயலைப் பிடிப்பதா? குழப்பம் வந்தது.

இரண்டையும் தவற விட்டது.

நண்பர்கள் ஓடித் தப்பித்தனர்.





### நிரப்புக.

முதல் எழுத்தை மாற்றினால் கிடைக்கும் சொல்லை எடுத்து எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீன் | | வட்டம் | | வயல் | | கரி | |

### விடை எழுதுக.

1. இக்கதையில் நண்பர்களாக இருந்தவை எவை?

_______________________________________________


2. நரிக்கு என்ன குழப்பம் ஏற்பட்டது?

_______________________________________________



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 43 11/5/2025 4:14:33 PM

## 4.9 நாங்களே உருவாக்குவோம்










படத்தைப் பார்த்து வினாக்கள் உருவாக்கிக் கேட்பேன்; குறிப்பேட்டில் எழுதுவேன்.













EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 45 11/5/2025 4:14:35 PM


## 4.10 எழுத்துகளை இணைத்துச் சொல்லைப் படிப்போம்



குகை



பை


முட்டை


வீணை


சிறுத்தை


எலுமிச்சை


ஆமை

**மேலுள்ள சொற்களைக் கொண்டு நிரப்புக.**

| | |
|---|---|
| விரைந்து ஓடும் | மெதுவாக நடக்கும் |
| இசை தரும் | புளிப்பாக இருக்கும் |
| விலங்குகள் தங்கும் | பறவை இடும் |

## 4.11 நாங்களே படிப்போம்; எழுதுவோம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கை | ஙை | சை | ஞை | டை | ணை | தை | நை | பை |
| மை | யை | ரை | லை | வை | ழை | ளை | றை | னை |

| | | | | |
|---|---|---|---|---|
| வலை | பறவை | அன்னை | மெத்தை | வகுப்பறை |
| மைனா | குப்பை | அட்டை | முருங்கை | கற்றாழை |
| தலையணை | பச்சைக்கிளி | சுரைக்காய் | விளையாட்டு | |




காகம் கடைக்குச் சென்றது.
வடை வாங்கி வந்தது.
முருங்கை மரத்தில் அமர்ந்தது.
பச்சைக்கிளியைப் பார்த்தது.
வடையைப் பிட்டுத் தந்தது.




## 4.12 படத்திற்கு ஏற்ற தொடர்களை எடுத்து எழுதுவேன்

மழை பெய்தது.
குதிரை வந்தது.
கடைக்குச் சென்றான்.
பூனை ஓடியது.

பானைக்குள் புகுந்தது.
வாழை செழித்தது.
அவரை தின்றது.
வடை வாங்கினான்.



மழை பெய்தது.
வாழை செழித்தது.







## 4.13 சிந்திப்போம்; விடையளிப்போம்

**தொடர்களைப் படித்து விடையைத் தேர்ந்தெடுக்க.**

எழுத்துகளுக்குள் ஓட்டப்போட்டி நடந்தது.
முதலிடத்தைப் பெற்றது குறில் எழுத்து.
இரண்டாம் இடத்தைப் பெற்றது மெய் எழுத்து.
மூன்றாம் இடத்தைப் பெற்றது நெடில் எழுத்து.
மூவரும் வரிசையாக நின்றனர்.
புதிய சொல் உருவாகியது.
அந்தச்சொல் எந்தச்சொல்?

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் | |
|---|---|---|---|
| ப | ந் | து | |
| அ | ம் | மா | |
| பூ | ங் | கா | |

## சொல்லக்கேட்டு எழுதுவோம்



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 47 11/5/2025 4:14:39 PM



# வீட்டிலும் செய்யலாம்

## விடைதேடவா! விளையாடவா!

### 1. ஓர் எழுத்தை நிரப்பி இரண்டு சொல் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| ஆ | ந் | ○ | ______ |
| ந | த் | | ______ |

| | | | |
|---|---|---|---|
| கு | டு | ○ | ______ |
| ப | ற | | ______ |

| | | | |
|---|---|---|---|
| மு | ட் | ○ | ______ |
| அ | ட் | | ______ |

| | | | |
|---|---|---|---|
| கு | தி | ○ | ______ |
| அ | வ | | ______ |

### 2. மெய்யெழுத்துகளை நிரப்பிச் சொல்லாக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| எ | லு | மி | | சை |

| | | | |
|---|---|---|---|
| சி | று | | தை |

| | | | | |
|---|---|---|---|---|
| சு | ரை | | கா | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப | | சை | | கி | ளி |

### 3. வண்ணமிட்ட எழுத்திற்குரிய நெடில் எழுத்தை நிரப்புக.

கடைக்குக் ____கம் சென்றது.

வடை ____ங்கி வந்தது.

பச்சைக்கிளியைப் ____ர்த்தது.



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 48 11/5/2025 4:14:41 PM

**4. ஒரே தொடரைக் கொண்டு நிரப்புக.**

சித்தி ______________________.

அத்திப்பழம் தின்னுவேன்.

பாட்டி ______________________.

குட்டிப்பூனை பார்ப்பேன்.

அண்ணன் ________________.

திண்ணையிலே ஆடுவேன்.

**படிப்பேன்; தொடர்களை வரிசைப்படுத்தி எழுதுவேன்**

மானை ஏமாற்றி அழைத்துச் சென்றது.

முயல் மானைக் காப்பாற்ற நினைத்தது.

நரி மானை வேட்டையாட எண்ணியது.

இரண்டும் தப்பித்தன; நரி ஏமாந்தது.

இரண்டும் ஒரே நேரத்தில் இருவேறு திசைகளில் ஓடின.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________




**மகிழ்ச்சியாக இருந்த நேரம்**

- பிடித்த உணவு கிடைத்தபோது
- என் செயலைப் பிறர் பாராட்டியபோது

**கோபமாக இருந்த நேரம்**

- யாரேனும் என்னைக் கொத்த வந்தபோது
- பிறரைக் கேலி செய்பவரைப் பார்த்தபோது

**வருத்தமாக இருந்த நேரம்**

- என் கூழாங்கல் தொலைந்தபோது
- மைனாவைக் கோபத்தில் திட்டியபிறகு

**அழுது கொண்டிருந்த நேரம்**

- எனக்கு அடிபட்டு வலித்தபோது
- என் தோழி வேறு காட்டிற்குச் சென்றபோது



## நீங்கள் எப்போதெல்லாம் எப்படியெல்லாம் இருந்தீர்கள்?



மகிழ்ச்சியாக இருந்த நேரம்

______________________________

______________________________

கோபமாக இருந்த நேரம்

______________________________

______________________________

வருத்தமாக இருந்த நேரம்

______________________________

______________________________

அழுது கொண்டிருந்த நேரம்

______________________________

______________________________




EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 50 11/5/2025 4:14:42 PM

## மாதத் தேர்வு

**மொத்த மதிப்பெண்கள் = 15**

### 1 நிரப்புக. (3 x 1 = 3)


நத்______


யா______


______டயம்

### 2 தொடர்புடைய சொல்லை எடுத்து எழுதுக. (3 x 1 = 3)

வாத்து　　வானம்　　முதலை　　ஆமை

மேகம், விண்மீன், நிலா – ____________________

தண்ணீர், விலங்கு, ஓடு – ____________________

குளம், குவாக், நீந்துதல் – ____________________

### 3 படத்திற்கு உரிய சொற்களை ✓ செய்க. (1 x 3 = 3)



வாழை, தவளை ☐

தவளை, தென்னை ☐

வாழை, குடுவை ☐

### 4 சொற்களை உரிய கட்டத்தில் எழுதுக. (3 x 1 = 3)

அத்தை

ஆடு


கபிலன்

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |

### 5 தொடருக்கு உரிய படத்திற்கு ✓ குறியிடுக. (1 x 3 = 3)

வெல்லத்தில் கட்டெறும்பு







## மாதத் தேர்வு

**மொத்த மதிப்பெண்கள் = 15**

**1** முதல் எழுத்தை மாற்றிப் புதிய சொற்கள் உருவாக்குக. **3 x 1 = 3**

சிரி – ____________ தேன் – ____________ கோடு – ____________

**2** படத்திற்கு உரிய தொடரை எடுத்து எழுதுக. **1 x 3 = 3**

யானைமேல் பூனை உள்ளது.

பானைக்குள் பூனை நுழைகிறது.



______________________________________________

**3** படித்து விடை எழுதுக. **1 x 3 = 3**

மானை வேட்டையாட நரி நினைத்தது.

வேட்டையாட நினைத்தது எது?

______________________________________________

**4** உயர்திணை, அஃறிணைப் பெயர்களை எடுத்து எழுதுக. **3 x 1 = 3**

குமணன், பாட்டி தந்த முறுக்கு தின்றான்.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |

**5** மூன்று குறிப்புகளுக்கும் பொருத்தமானதை வட்டமிடுக. **1 x 3 = 3**

பல வண்ணங்களில் இருக்கும்.

பார்த்து மகிழலாம்.

வானில் தோன்றும்.

பூக்கள் வானவில் மணிகள்



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 52 11/5/2025 4:14:44 PM

## மாதத் தேர்வு

**மொத்த மதிப்பெண்கள் = 15**

3 x 1 = 3

**1** வட்டமிட்ட எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுக.

ம
சி (லை) ஞ
ட த

________ ________ ________

3 x 1 = 3

**2** உயர்திணை, அஃறிணைச் சொற்களை எடுத்து எழுதுக.

கயல் தன் தாத்தா வீட்டிற்குச் சென்றாள். அங்கு ஆட்டுக்குட்டி இருந்தது. அதற்கு ஆசையாகப் புல் கொடுத்தாள்.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |

1 x 3 = 3

**3** படத்திற்கு உரிய தொடரை ✓ செய்க.



பூவின் மேல் வண்டு. ☐

பூவின் மேல் தும்பி. ☐

1 x 3 = 3

**4** படித்து விடை எழுதுக.

முயலும் மானும் நண்பர்கள். நரி ஒன்று மானிடம் வந்தது. உன் நண்பன் முயலுக்கு ஆபத்து என்றது. உடன் அழைத்துச் சென்றது. அதைப் பார்த்த முயல் வேகமாக மானிடம் ஓடியது .

நரி, யாரை அழைத்துச் சென்றது? ________________

3 x 1 = 3

**5** படம் பார்த்துத் தொடர்கள் எழுதுக.



________________

________________

________________

பக்கம் – 106, 107, 108 படித்தல் பயணம் செல்வோம்.

# 5 மழைப் பாட்டு

## 5.1 பெயரைச் சொல்வோம்; எழுத்தை அறிவோம்

### கொ




கொக்கு

கொய்யா




### தொ



தொப்பி

தொட்டில்



### பொ



பொரி உருண்டை

பொம்மை



### மொ



மொட்டு

மொச்சை



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஙொ | சொ | ஞொ | டொ | ணொ | நொ | யொ |
| ரொ | லொ | வொ | ழொ | ளொ | றொ | னொ |



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 54 11/5/2025 4:14:47 PM

## 5.2 கொ முதல் னொ வரை எழுத்துகளை இணைப்பேன்


ஞொ டொ ணொ நெ

சொ யொ தொ நொ



ஙொ ரொ மொ பொ னொ

கொ லொ ளொ றொ



வொ ழொ ளா னி

## 5.3 நாங்களே படிப்போம்; விடையளிப்போம்

செய்தித்தாள் உருண்டை எடுத்தாள் ஒட்டினாள் மகிழ்ந்தாள் கிடைத்தது



மும்தாஜ் செய்தித்தாள்கள் எடுத்தாள்.
சிறு உருண்டை ஆக்கினாள்.
ஒட்டும்தாளை ஒட்டினாள்.
செய்த உருண்டையைத் தாளில் வைத்தாள்.
மீண்டும் உருண்டை ஆக்கினாள்.
ஒட்டும்தாளை ஒட்டினாள்.
அதேபோல் மீண்டும் மீண்டும் செய்தாள்.
விளையாட்டுப் பொருள் கிடைத்தது.
விளையாடி மகிழ்ந்தாள்.

**மும்தாஜ் செய்த பொருள் எது?**

- பம்பரம் ☐
- பட்டம் ☐
- பந்து ☐

## 5.4 நாங்களே படிப்போம்; விடையளிப்போம்



வண்ணத்தாளை எடுப்பேன்

பட்டம் செய்து விடுவேன்.



வண்ணத்தாளை எடுப்பேன்

தோரணம் செய்து கட்டுவேன்.



வண்ணத்தாளை எடுப்பேன்

கப்பல் செய்து விடுவேன்.



வண்ணத்தாளை எடுப்பேன்

பூக்கள் செய்து வைப்பேன்.



வண்ணத்தாளை எடுப்பேன்

கடிகாரம் செய்து கட்டுவேன்.

வண்ணத்தாளை எடுப்பேன்

______________ செய்து மகிழ்வேன்.

**வண்ணத்தாளில் செய்ய முடிந்தவை**

ஒரு பொருள் ◯ இரண்டு பொருள் ◯ பல பொருள் ◯

**காற்று நன்கு வீசுகிறது. அதற்கேற்ப வண்ணத்தாளில் என்ன செய்யலாம்?**

பூக்கள் ◯ தோரணம் ◯ பட்டம் ◯

## 5.5 இது எங்கள் நேரம்



### படிப்போம்; பாடநூலில் அடிக்கோடு இடுவோம்

மழைநீர் | வெள்ளம் | மண்ணில் | செல்லுதே

வியர்வை | பொழியும் | செல்வமே | கொடை | வியப்பு

மனிதர் | பறவை | விலங்குகள் | ஓடும் | தேக்கியே

எண்ண வேண்டுமே. | ஒன்றும் இல்லையே. | பசியைத் தீர்ப்போமே.

### மேலுள்ளவற்றில் இருந்து விடையைக் கண்டுபிடித்து எழுதுவோம்

1. **வி** எழுத்தில் தொடங்கும் சொற்கள் ------------------------------------
---------------------------------------- ----------------------------------------
2. வானில் பறப்பது ----------------------------------------
3. விண்ணிலிருந்து கிடைப்பது ----------------------------------------
4. ஆற்றில் பாய்ந்து செல்வது ----------------------------------------
5. எதிர்பார்ப்பு இல்லாமல் கொடுப்பது ----------------------------------------
6. இல்லை என்ற சொல் உள்ள தொடர் எது?
--------------------------------------------------------------------------------
7. பசி என்ற சொல் உள்ள தொடர் எது?
--------------------------------------------------------------------------------

சிறகுகள் விரியட்டும் 2

## 5.6 எழுத்து எது? கண்டுபிடித்து எழுதுவேன்

நொ தொ கொ




கொ சொ டொ



யொ வொ பொ



றொ பொ மொ



ளொ சொ கொ








EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 58
11/5/2025 4:14:53 PM

## 5.7 படிப்பேன்; விடையளிப்பேன்

**சேர்த்து எழுதுக.**

மழை + நீர் = ______________________ (மழைநீர் / மழையின்நீர்)

**பிரித்து எழுதுக.**

வியப்பொன்றும் = ______________________ (விய + ஒன்றும் / வியப்பு + ஒன்றும்)

**சரியான கூற்றுக்கு ✓ செய்க.**

- மழைநீரைச் சேமிக்க வேண்டும். ◯
- மழைநீர் உழவுக்குப் பயன்படாது. ◯
- மழைநீரும் ஒரு செல்வமே. ◯
- நான் நீரை வீணாக்க மாட்டேன். ◯
- பறவைகளுக்கு மழைநீர் தேவையில்லை. ◯



படித்தல்
படிக்கட்டு

### விண்ணின் கொடை

மழைநீர் வெள்ளமாக ஓடுகிறது. அது மண்ணில் வீணாகச் செல்கிறது. உழைக்கும்போது வெளிப்படும் வியர்வையைப் போல மழைநீரை உயர்வாக நினைக்க வேண்டும்.

பொன்னையும் பொருளையும் போல பொழியும் மழைநீரும் செல்வம்தான். மழைநீர் வானத்திலிருந்து கிடைக்கும் கொடை ஆகும். அதில் வியப்பு ஒன்றும் இல்லை.

மனிதர்கள், பறவைகள், விலங்குகள் மகிழ்ந்து வாழ்வதற்கு மழைநீர் தேவை. வீணாக ஓடும் மழைநீரைத் தேக்கி உலகில் உள்ளவர்களின் பசியைத் தீர்ப்போம்.


**ஒரு நிமிடத்தில் படித்த சொற்களின் எண்ணிக்கை** ☐

**முழுப்பகுதியையும் படிக்க எடுத்துக்கொண்ட நேரம்** ☐



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 59 11/5/2025 4:14:54 PM

## 5.8 படித்துப் பார்ப்போம்



மழைநீர் வெள்ளம் ஓடியே
மண்ணில் வீணாய்ச் செல்லுதே
உழைப்பின் வியர்வை போலதை
உயர்வாய் எண்ண வேண்டுமே!

பொன்னும் பொருளும் போலவே
பொழியும் நீரும் செல்வமே
விண்ணின் கொடை என்பதில்
வியப்பு ஒன்றும் இல்லையே!

மனிதர் பறவை விலங்குகள்
மகிழ்ந்து வாழத் தேவையே
ஓடும் நீரைத் தேக்கியே
உலகின் பசியைத் தீர்ப்போமே!

### நிரப்புக.

1. இரண்டு எழுத்துச் சொல் ________________.

2. உழைப்பின் ________________ போலதை உயர்வாய் எண்ண வேண்டுமே.

3. ஓடும் நீரைத் தேக்கியே ________________ பசியைத் தீர்ப்போமே!

### விடை எழுதுக.

1. மழைநீர் எதனுடைய கொடை?

____________________________________________



EE_Tamil_WB_Malar_Term 3_2025.indd 60 11/5/2025 4:14:54 PM

## 5.9 நாங்களே உருவாக்குவோம்



## 5.10 எழுத்துகளை இணைத்துச் சொல்லைப் படிப்போம்


கொடி


சொட்டு


தொலைபேசி


பொரி


மொட்டு


வானொலி

**மேலுள்ள சொற்களைக் கொண்டு நிரப்புக.**

| | |
|---|---|
| ________ தின்னலாம். | ________ கேட்கலாம். |
| ________ படரும். | ________ மலரும். |
| ________ பேசலாம். | ________ நீர். |

## 5.11 நாங்களே படிப்போம் ; எழுதுவோம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொ | ஙொ | சொ | ஞொ | டொ | ணொ | தொ | நொ | பொ |
| மொ | யொ | ரொ | லொ | வொ | ழொ | ளொ | றொ | னொ |

| | | | |
|---|---|---|---|
| கொய்யா | தொட்டில் | பாட்டொலி | பொன்வண்டு |
| பொரியல் | நொடிமுள் | எதிரொலி | சொட்டுமருந்து |
| நிலவொளி | பூங்கொத்து | தமிழ்மொழி | தொடர்வண்டி |

மொட்டை மாடிக்குச் சென்றேன்.
தொட்டிச் செடியைப் பார்த்தேன்.
மொட்டு ஒன்றைக் கண்டேன்.
பனித்துளி சொட்டக் கண்டேன்.
தொட்டுத் தொட்டுப் பார்த்தேன்.



## 5.12 படிப்பேன்; விடை எழுதுவேன்

கொக்கு ஒன்று ஓடைக்கு வந்தது. அங்கே அழகிய கூழாங்கல்லைக் கண்டது. ஆசையாக எடுத்து ஓர் இடத்தில் வைத்தது. அது மீன் பிடிக்க நினைத்தது; ஓடையில் பொம்மை போல அசையாமல் நின்றது; மீன் கிடைத்தது. அதற்குப் பசி நீங்கியது. பிறகுக் கூழாங்கல்லை எடுக்கச் சென்றது. அதைக் காணவில்லை; தொலைந்தது என நினைத்து வருந்தியது. திடீரெனக் காற்று வீசியது; இலைகள் பறந்தன. கூழாங்கல் தெரிந்தது.



(மேலுள்ள பத்தியில் இருந்து ஒ வரிசை உயிர்மெய் எழுத்து உள்ள சொற்களை எடுத்து எழுதுங்கள். கீழுள்ள வினாவிற்கு விடை கிடைக்கும்.)

**விளையாடிக் கொண்டிருந்த பாப்பா அழுதது. பாப்பா ஏன் அழுதது?**

____________________________________________

## 5.13 சிந்திப்போம்; விடையளிப்போம்

அருண், செடி வாடி இருப்பதைப் பார்த்தான். தண்ணீர் ஊற்ற நினைத்தான். அங்கு வந்த பாப்பா கதையைப் படித்துக்காட்டு அண்ணா என்றாள். செடிக்குத் தண்ணீர் ஊற்றிவிட்டு கதையைப் படித்துக்காட்டுவதாக அருண் கூறினான். அப்போது மேகம் கருத்தது; மழை பெய்யத் தொடங்கியது. இருவரும் வீட்டுக்குள் சென்றனர். அருண் எதையோ எடுத்தான்.

அருண் எடுத்த பொருள் எது?

வாளி ☐ கதைப்புத்தகம் ☐ குடை ☐

## 5.14 படிப்போம்; உரிய குறியீட்டை நிரப்பிச் சொல்லாக்குவோம்

| நெடி | பெய் | செல் | நெய் | பெறு | தென்னை |
|---|---|---|---|---|---|
| நொடி | பொய் | சொல் | நொய் | பொறு | தொன்னை |

ெ ா



| பொ | ரி |
|---|---|



| ப | ட் | டி |
|---|---|---|



